23.04.16

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## அறுவடைக்குத் தயார் நிலையில் நெற்பயிர்



காஞ்சிபுரம் மாவட்டத்தில் மழை நேரத்தில் பயிர் செய்யப்பட்ட நெற்பயிர்கள் தற்போது அறுவடைக்குத் தயாராக உள்ளன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் தொடர்ந்து மழை பெய்தது.

இதன் காரணமாக அனைத்து ஏரி, குளங்களும் நிரம்பின. டிசம்பர் இறுதியிலும், ஜனவரி மாதத்திலும் விவசாயப் பணிகளை விவசாயிகள் தொடங்கினர். இவ்வாறு தொடங்கப்பட்ட குறுகிய கால நெற்பயிர்கள் பல தற்போது அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளன. பெரும்பாலான விவசாயிகள் நெற்பயிர்களை உற்பத்தி செய்து அறுவடைக்குக் தயார் நிலையில் இருப்பதால் அவர்களுக்கு நெல் விற்பனையின்போது பாதிப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்

என சமூக ஆர்வலர்கள் வலியுறுத்துகின்றனர். விவசாயிகள் அறுவடை செய்யும் நெல் முழுவதையும் நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்து, அதனை மகசூல் குறைவாக உள்ள பிற மாநிலங்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் விவசாயிகள் வலியுறுத்துகின்றனர்.

**பூண்டி ஏரியில் மீண்டும் மீன் வளர்ப்புத் திட்டம்**

பூண்டி ஏரியில் ஏற்பட்ட வறட்சி காரணமாக ரூ. 1 கோடி மதிப்பீட்டில் வளர்க்கப்பட்ட மீன்கள் இறந்த நிலையில், தற்போது மீண்டும் பூண்டி ஏரியில் மீன் வளர்ப்புத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. திருவள்ளூரை அடுத்த பூண்டி ஏரியில் கடந்த 2015-ஆம் ஆண்டு மீன் வளர்ப்புத் திட்டம் சுமார் ரூ. 1 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. இதற்காக ஏரியில் மீன் வளர்ப்புத் தொட்டிகள், அங்கு தங்கி பராமரிக்கும் குடில்கள் ஆகியவை அமைக்கப்பட்டன.

ஆனால் கடந்த ஆண்டு ஏற்பட்ட வரலாறு காணாத வறட்சி காரணமாக, ஏரியில் வளர்க்கப்பட்ட மீன்கள் செத்து மிதந்தன. இதனால் மீன்வளத் துறைக்கு பல லட்சம் நஷ்டம் ஏற்பட்டது.

இந்த நிலையில் கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட வடகிழக்கு பருவமழையால் பூண்டி ஏரி முழு அளவில் நிரம்பி வடிந்தபோது, அங்கு அமைக்கப்பட்ட குடில்கள், தொட்டிகள் முழுமையாகச் சேதமடைந்தன. இந்த நிலையில் மீண்டும் மீன்களை வளர்க்க தொட்டிகள் அமைக்கும் பணி நடந்து வருகிறது. முதல்கட்டமாக ரூ. 5 லட்சம் மதிப்பில் மீன்குஞ்சுகள் வாங்கி விட மீன்வளத் துறையினர் முடிவு செய்துள்ளனர். இந்த நிலையில், மத்திய அரசு நிதியில் மீண்டும் மீன் வளர்ப்புத் திட்டத்தை தொடங்குவதற்காக, தொட்டிகள் அமைக்கும் பணிகள் நடந்துவருகின்றன. இப்பணிகள் முடிந்ததும், அவற்றில் மீன் குஞ்சுகள் விடப்பட்டு வளர்க்கப்படும் என்று, மீன் வளர்ப்புத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தையில் முருங்கை விலை சரிவு

ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தையில் செவ்வாய்க்கிழமை முருங்கைக்காய் விலை குறைந்தது.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் காய்கறிச் சந்தையில் முருங்கைக்காய் வரத்து அதிகரித்ததால், அவற்றின் விலை குறைந்தது. சில நாள்களுக்கு முன், ஒரு கிலோ ரூ. 20 முதல் ரூ. 25 வரை விற்பனையான முருங்கைக்காய், செவ்வாய்க்கிழமை விலை குறைந்தது. மர முருங்கை ரூ. 8, செடி முருங்கை ரூ. 9, கரும்பு முருங்கை ரூ. 12 வரை விற்பனையானது.

அதேபோல், மற்ற காய்கறிகளின் விலைகள் நிலவரம்: 1 கிலோ வெண்டைக்காய் ரூ. 10, தட்டப்பயறு ரூ. 10, சுரைக்காய் ரூ. 2, பாகற்காய் ரூ. 14, பீட்ரூட் ரூ. 8, அவரைக்காய் ரூ. 15, கொத்தவரை ரூ. 7, தக்காளி 14 கிலோ பெட்டி ரூ. 60, புடலைக்காய் ரூ. 5, சின்னவெங்காயம் ரூ. 5 முதல் ரூ. 13 வரை, பல்லாரி ரூ. 10-க்கும் விற்பனையானது.

## வறண்ட பூமியில் தர்ப்பூசணி விவசாயம் ரூ. 1.60 லட்சம் வரை வருமானம்

விருதுநகர் மாவட்டத்தின் வறட்சி பகுதியான திருச்சுழி, தொட்டியாங்குளம் கிராமத்தில் விவசாயி கணேசன் என்பவர், தர்ப்பூசணி பயிரிட்டுள்ளார். ரூ. 40 ஆயிரம் செலவு செய்ததற்கு ரூ. 1.60 லட்சம் வரை வருமானம் கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

கோடை தொடங்கி விட்டால் பொதுமக்கள் குளிர் பானங்களை நாடுவது வழக்கம். தற்போது வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக ஆங்காங்கே நுங்கு, பதனீர், இளநீர், வெள்ளரி, தர்ப்பூசணி விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

அதிக நீர்ச்சத்து உள்ளதால் தர்பூசணிக்கு உடல் வெப்பத்தை குறைக்கும் தன்மை உண்டு. கொழுப்புச் சத்து மிக குறைவு, நோய் எதிர்ப்பு சக்தி அதிகம், புற ஊதாக் கதிர்களிலிருந்து சருமத்தை பாதுகாக்கும்

லைக்கோபின் தர்ப்பூசணியில் அதிகம் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதனால் தர்ப்பூசணி விற்பனை அமோகமாக உள்ளது.

இதையடுத்து குறுகியகாலப் பயிராக வறண்ட பூமியான திருச்சுழி பகுதியில் தர்ப்பூசணியைப் பயிரிட்டுள்ளார், விவசாயி கணேசன். அவர் கூறியதாவது:

தர்ப்பூசணி நடவு செய்த இரண்டு மாதத்தில் அறுவடைக்கு தயாராகி விடும். ஒரு ஏக்கருக்கு 10 முதல் 15 டன் வரை மகசூல் கிடைக்கும்.

ஒரு பழம் 12 கிலோ முதல் 15 கிலோ வரை இருக்கும். ஒரு செடியில் எட்டு பிஞ்சு விடும். அதில் ஆறு பிஞ்சுகளை நீக்கிவிட்டால் இந்த மகசூல் கிடைக்கும். வாரம் ஒரு முறை மட்டும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

தற்போது 4 ஏக்கரில் ரூ. 40 ஆயிரம் செலவில் தர்ப்பூசணி பயிரிடப்பட்டுள்ளேன். பழங்களை கிலோ ரூ.10 வீதம் மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, விருதுநகர் மாவட்ட வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். இதுவரை ரூ. 1.60 லட்சம் வரை விற்பனை செய்துள்ளேன் என்றார் அவர்.

## சிறுதானியப் பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மைப் பயிற்சி

ராசிபுரம் அருகேயுள்ள வெண்ணந்தூர் வட்டாரம் பல்லவ நாயக்கன்பட்டி கிராமத்தில் வேளாண்மைத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) மூலம் சிறுதானியப் பயிர் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மையின் கீழ் பயிற்சிஅளிக்கப்பட்டது.

வேளாண்மை உதவி இயக்குநர் கு.சுந்தரவடிவேல், விவசாயிகளை வரவேற்று ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மைப் பயிற்சியின் நோக்கம் குறித்து விளக்கினார். நாமக்கல் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கார்த்திகேயன், பயிற்சியின் நோக்கம், விவசாயத் தொழில் நுட்பங்களின் மூலம் விவசாயிகள் அடையும் நன்மைகள், வேளாண்மையில் விவசாயிகளின் பங்களிப்பு குறித்து எடுத்துக்கூறினார்.

நாமக்கல் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் சுப்பையா, விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறையின் கீழ் செயல்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) திட்டம் மற்றும் நாமக்கல் உழவர் பயிற்சி நிலையத்தின் கீழ் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் பயிற்சிகள் குறித்து விளக்கமளித்தார்.

வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியத்தலைவர் ஆர்.தமிழ்செல்வி, தலைமை வகித்தார். வட்டார அட்மா திட்டத் தலைவர் எஸ்.பி.தாமோதரன், அட்மா திட்டத்தின் மூலம் கடந்த மற்றும் வரும் ஆண்டுகளின் திட்ட நோக்கம், செயல்பாடுகள் குறித்து எடுத்துரைத்தார்.

வேளாண்மை அலுவலர் கை.வசுமதி, வட்டார வேளாண்மைத் துறையின் மானியத் திட்டங்கள் மற்றும் சிறுதானிய விவசாயத்தில் சாகுபடித் தொழில் நுட்பச் செய்திகளை விவசாயிகளுக்கு வழங்கினார்.

துணை வேளாண்மை அலுவலர் வ.பழனிசாமி, ஆரோக்கியசாமி, கருப்புசாமி, அந்தோணிசாமி, மேகலா ஆகியோர் பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு உயிர் உர விதை நேர்த்தி செயல் விளக்கம், செய்து காண்பித்தனர்.

பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் பாஸ்கர், கஜேந்திரன், கருப்பண்ணன் ஆகியோர் தங்களது சிறுதானியப் பயிர்களின் விவசாய அனுபவங்களை விவசாயிகளிடம் பகிர்ந்து கொண்டனர். பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருள்கள் வழங்கப்பட்டன.

அட்மா திட்ட வட்டார தொழில் நுட்ப மேலாளர் மா.ரமேஷ், அட்மா திட்டத்தின் நோக்கம் மற்றும் செயல்பாடுகள் குறித்து விளக்கினார்.

**காளான் வளர்ப்பு:இலவச பயிற்சி**

புதுக்கோட்டை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிராமிய சுய வேலைவாய்ப்புப் பயிற்சி நிலையம் சார்பில் இலவச காளான் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இதுகுறித்து பயிற்சி நிலைய இயக்குநர் சு. ரமேஷ் வெளியிட்ட தகவல்:

எங்களது பயிற்சி நிலையத்தின் சார்பில் படித்து,வேலைவாய்ப்பற்ற கிராமப்புற இளைஞர்கள், மகளிர்க்கு பல்வேறு தொழிற்பயிற்சிகள் அளித்து அவர்களின் வாழ்வாதாரத்தை உறுதிசெய்யும் நோக்கில் அவர்களது எதிர்காலத்துக்கு வழிகாட்டி வருகிறோம். அதன்படி, தற்போது காளான் வளர்க்கும் தொழில்நுட்பங்கள் குறித்து 6 நாள் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இதில்,சேர விரும்பும் 18 வயது முதல் 35 வயது வரையுள்ள பட்டப்படிப்பு முடித்த கிராமப்புற இளைஞர்கள்,மகளிர் நிலைய இயக்குநர், இந்தியன் ஓவர்சீஸ்

வங்கி கிராமிய சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிலையம்,15062,மேல 4-ம் வீதி, திலகர் திடல், புதுகை 622 001 என்ற முகவரியில் 4.4.2016ம் தேதிக்குள் நேரில் விண்ணப்பித்து பயன் பெறலாம். மேலும் விவரங்களுக்கு 04322-225 339, 99947 37185.

**முந்திரி இறக்குமதி வரியை ரத்து செய்ய வலியுறுத்தல்**

கச்சா முந்திரிக்கு விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி வரியை ரத்து செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, தமிழ்நாடு முந்திரி பருப்பு தொழிலாளர் சங்கச் செயலர் பி. சிங்காரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழகத்தில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, புதுக்கோட்டை, அரியலூர், பெரம்பலூர், கடலூர், திருவண்ணாமலை, தேனி, சிவகங்கை போன்ற மாவட்டங்களில் செயல்பட்டுவரும் முந்திரி ஆலைகளில் சுமார் 2 லட்சம் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இந்த தொழிலாளர்களுக்கு ஆண்டுமுழுவதும் வேலை கிடைப்பதற்கு தேவையான கச்சா முந்திரி பற்றாக்குறை காரணமாக வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. சீனா, வியத்நாம், தான்சானியா, இந்தோனேசியா உள்ளிட்ட வெளிநாடுகளிலும் முந்திரி ஆலைகள் நிறுவி, முந்திரி பருப்பு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள காரணத்தால், இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் இந்த தொழில் மிகுந்த பாதிப்பில் உள்ளது.

தமிழகத்தில், குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமே சுமார் 1 லட்சம் தொழிலாளர்கள் இந்த தொழிலை நம்பி வாழ்ந்து வரும் நிலையில், கடந்த 6 மாத காலமாக வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாள்கள்தான் வேலை கிடைத்து வருகிறது. மேலும் பல முந்திரி ஆலை நிர்வாகங்கள் இரண்டு, மூன்று மாதங்களாக நிரந்தரமாக முந்திரி ஆலைகளை மூடியுள்ளது.

இந்நிலையில் மத்திய அரசு அண்மையில் தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் கச்சா முந்திரிக்கு கூடுதலாக 9.36 சதவீதம் இறக்குமதி வரி விதித்துள்ளது. இது ஏற்கெனவே பாதிப்பில் இருந்த முந்திரி ஆலைத்தொழில் மேலும் பாதிப்புக்குள்ளாகி அழிவை நோக்கி செல்லும் நிலையை உருவாகியுள்ளது.

மேலும் ஏற்கெனவே முந்திரி பருப்பு ஏற்றுமதியில் இருந்த நிபந்தனைகளுடன் மேன்மேலும் அதிகமான நிபந்தனைகளை விதித்து, மத்திய அரசு முந்திரி ஆலைத் தொழிலை முற்றிலும் அழிக்க தீர்மானித்துள்ளதாக தெரிகிறது.

மத்திய அரசின் இந்த நிலைபாடுகளால் முந்திரி ஆலை தொழிலை நம்பி வாழ்ந்துவரும் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எனவே மத்திய அரசு தமிழகம் உள்பட இந்தியா முழுவதும் செயல்பட்டு வரும் முந்திரி ஆலைத்தொழிலை பாதுகாக்க, கச்சா முந்திரி இறக்குமதி மீது விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி வரிகளையும், முந்திரி பருப்பு ஏற்றுமதி செய்வதற்கு விதிக்கப்பட்டுள்ள கடுமையான நிபந்தனைகளையும் ரத்து செய்ய வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உளுந்து, பயறு அறுவடை தொடக்கம்**

காரைக்காலில் நெல் அறுவடைக்குப் பிந்தைய உளுந்து, பயறு சாகுபடி சுமார் 3,000 ஹெக்டேர் இலக்கில் பயிரிடப்பட்டது. அறுவடைப் பணி தற்போது பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்படுகிறது. தாமதமாக விதைக்கப்பட்ட சுமார் 1,000 ஹெக்டேர் அடுத்த மாதத்தில் அறுவடை செய்யப்படுமென கூறப்படுகிறது.

நெல் அறுவடைக்குப் பிறகு உளுந்து, பயறு விதைப்பது வழக்கம். இந்நிலையில், சம்பா சாகுபடி கால நிறைவில் அறுவடை முடிந்ததும் ஆங்காங்கே உளுந்து, பயறு விதைகளை விவசாயிகள் தெளித்தனர்.

அறுவடைக்குப் பிந்தைய சாகுபடி என இதனைக் கூறும் விவசாயிகள், மானாவாரி முறையிலும், நேர்த்தியாகவும் சாகுபடியை தொடங்கியுள்ளனர். காரைக்கால் பகுதியில் திருநள்ளாறு, பேட்டை, அம்பகரத்தூர், பச்சூர் உள்ளிட்ட சுற்றுவட்டாரத்தில் இவை அதிகமான பரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உளுந்து 65 முதல் 90 நாள்களுக்குள் அறுவடை செய்யக்கூடியது. பயறு 70 முதல் 90 நாள்களுக்குள் அறுவடை செய்யக்கூடியது. பரவலாக நிலம் அதிகம் வைத்திருக்குகம் விவசாயிகள், குறிப்பிட்ட இடத்தில் உளுந்தும், வேறு இடத்தில் பயறும் சாகுபடி செய்தனர்.

காரைக்கால் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் இப்பயிர் அறுவடைப் பணி தற்போது தொடங்கப்பட்டுள்ளது. இதுகுறித்து காரைக்கால் கூடுதல் வேளாண் அதிகாரிகள் தரப்பில் திங்கள்கிழமை கூறப்பட்டது:

காரைக்காலில் ஏறக்குறைய 3,000 ஹெக்டேர் பரப்பில் உளுந்து, பயறு சாகுபடியை விவசாயிகள் மேற்கொண்டனர். விவசாயிகளுக்குத்

தேவையான ஆலோசனைகளும், பயிர் நல்ல மகசூலைத் தருவதற்கேற்ற பூச்சிக்கொல்லி உள்ளிட்ட இடுபொருள்கள் தரப்பட்டன.

பாசிக் நிறுவனம் மூலம் வழங்கப்பட்ட விதைகள் மூலமும், விவசாயிகள் இருப்பு வைத்த விதைகளும், வெளியூரில் வாங்கிவந்தும் தெளித்தனர். அறுவடைப் பணி தற்போது தொடங்கி நடந்துவருகிறது. ஒரு ஹெக்டேருக்கு ஒரு டன் மகசூல் எதிர்பார்க்கப்படுகிறது. ஒட்டுமொத்த அறுவடையும் முடிந்த பிறகே மகசூல் விவரம் தெளிவாக தெரியவரும் என்றனர்.

## "கூட்டு முறையில் விவசாயப் பண்ணையம் அமைத்தால் 50% அரசு மானியம்'

விவசாயிகள் கூட்டு முறையில் வேளாண் பண்ணையம் அமைத்து பயிர் செய்தால் 50 சதவீதம் அரசு மானியம் பெறலாம் என்று புதுச்சேரி வேளாண்துறை இயக்குநர் ஏ. ராமமூர்த்தி தெரிவித்தார்.

பண்டித ஜவாஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், கல்லூரி மற்றும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழக (தேசிய விதைத் திட்டம்) இணைந்து வேளாண் உற்பத்தியில் தரமான விதைகளின் பங்கு என்ற தலைப்பில் கருத்தரங்கம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கருத்தரங்கில் புதுச்சேரி வேளாண் துறை இயக்குநர் ஏ. ராமமூர்த்தி பேசியது:

காரைக்காலில் செயல்படும் வேளாண் கல்லூரியானது விவசாயிகளின் வளர்ச்சிக்கு சிறப்பாகச் செயல்படுகிறது. குறிப்பாக, விதை உற்பத்தியில் லாபம் அடையும் திட்டத்தில் பல்வேறு உத்திகளை விவசாயிகளுக்கு விளக்குகிறது. புதுச்சேரி அரசு, நிதி நெருக்கடியில் இருந்தபோதும், இந்தக் கல்லூரி நல்ல வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

பாரம்பரிய விதைகளான சீரக சம்பா, மாப்பிள்ளை சம்பா போன்ற நெல் விதைகளை பயிரிடுவதில் ஆர்வம் காட்டுகின்றனர். எதிர்காலத்தில் இது நல்ல வளர்ச்சிப் போக்கில் இருக்கும்.

விவசாயிகள் தனித்தனியாகப் பயிர் செய்வதைக் காட்டிலும், மற்ற மாநிலங்களின் தேவையை அறிந்து, கூட்டு முறையில் பண்ணையம் அமைத்து உற்பத்தி செய்ய வேண்டும். உற்பத்திப் பண்ணையம் அமைப்பது குறித்து அரசிடம் பதிவு செய்து கொள்ளவேண்டும். இதன்மூலம் பயிர் செய்யப்படும்போது அரசு 50 சதவீத மானியம் அளிக்கிறது.

தேவையறிந்து உற்பத்தி செய்வதன் மூலமும், மானியத்தின் மூலமாகவும் விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும் என்றார்.

விதை உற்பத்தி குறித்து வேளாண் கல்லூரி முதல்வர் டி. ராமநாதன், ஒருங்கிணைந்த மேலாண்மை உத்தி குறித்து பேராசிரியர் ஆர். பூங்குழலன், ஒருங்கிணைந்த நோய் கட்டுப்பாட்டு முறை குறித்து காரைக்கால் கூடுதல் வேளாண் இயக்குநர் கா. மதியழகன், ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை உத்தி குறித்து கே. குமார் ஆகியோர் பேசினர். விவசாயிகளின் சந்தேகங்களுக்கும் வேளாண் வல்லுநர்கள் விளக்கம் அளித்தனர்.

கருத்தரங்கில் காரைக்கால் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

*இயற்கை விவசாயம் தேசத் துரோகமா?*

வேளாண்மைத் துறையில் மரபணு மாற்ற விதைகள் தொடர்பாக ஆராய்ச்சி செய்யும் ஒருசில விஞ்ஞானிகள் தம்மை தேசபக்தர்கள் என்று காட்டிக்கொள்வதற்காக, அதிக எரிசக்திப் பயன்பாட்டில் உற்பத்தியாகி அதிக எரிசக்திப் பயன்பாட்டில் (போக்குவரத்து) வினியோகமாகும் ரசாயன உரங்களையும், உயிர்க்கொல்லிகளையும் தூக்கிப்பிடித்து எதிர்காலத்தில் மக்களைப் பட்டினியிலிருந்து காப்பாற்ற மரபணுமாற்ற விதை விவசாயமே சரியான தீர்வு என்று பேசுகின்றனர். அதேசமயம், இயற்கை வழி விவசாயத்தால் உற்பத்தி உயராது என்பதுடன் இயற்கை விவசாயிகளை தேசப்பற்று இல்லாதவர்கள் என்று ஏசவும் தொடங்கிவிட்டனர். எனினும், உண்மை எதுவெனில் இயற்கை விவசாயிகள் நலவாழ்வில் அக்கறையுள்ளவர்கள், நாட்டுப்பற்றில்லாத கன்னையகுமார்கள் அல்லர்.

அகில உலகத்திலும் விவசாயத்தை ஆட்சி செய்வது இயற்கைக்கு மாறான, நோய்க்குறியுள்ள ரசாயன விவசாயமே. அகில உலகத்திலும் ஒட்டுமொத்த நிலப்பரப்பில் 4 சதவீத நிலமே இயற்கை வழியில் இயங்குகிறது. இந்திய நிலை இன்னமும் குறைவு. 2 சதவீதம் தேறுவதே கடினம். மிகக் குறைந்த விளை நிலப்பரப்புள்ள சிக்கிம் மாநிலம் மட்டும் விதிவிலக்கு. இந்த ஒரு மாநிலத்தில் மட்டும் இயற்கை விவசாயம் முழுமை பெற்றுள்ளது.

பொதுவாக, வடகிழக்கு மாநிலங்களின் விவசாயத்தில் மரபணு மாற்ற விதைகள் நுழையவில்லை. ரசாயனப் பயன்பாடும் குறைவு என்றாலும் அம்மாநிலங்களில் விவசாயிகளின் தற்கொலைகள் இல்லை. அரிசி உற்பத்தியில் முதல்நிலை வகிக்கும் மேற்கு வங்கத்திலும் விவசாயிகளின் தற்கொலை அரிது. நவீன விவசாயத்தில் கொடிகட்டிப் பறக்கும் பஞ்சாப், ஹரியாணா, ராஜஸ்தான், மகாராஷ்டிரம், குஜராத், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், தமிழ்நாடு மாநிலங்களில் விவசாயிகளின் தற்கொலைகள் ஏன்? சுமார் 80 சதவீதம் பருத்தி விவசாயம் செய்யும் விவசாயிகள் மரபணு மாற்றிய மான்செண்டோ விதைகளின் காரணமாகப் போதிய விலை இல்லாமல் தற்கொலை செய்து கொள்கின்றனர்.

மரபணு மாற்றம் என்பது விதைப் புரட்சியின் ஓர் அம்சம். பசுமைப் புரட்சியை உருவாக்கிய நார்மன் பார்லாக், குள்ளரக மெக்சிகன் வெள்ளை கோதுமையைக் கண்டுபிடித்த அதே நுட்பத்தில் ஐ.ஆர்.8, தைச்சுங் போன்ற குள்ளரக நெல் கண்டுபிடிக்கப்பட்டது. மேற்படி வீரிய ரக விதைகளில் செய்யப்பட்ட மரபணு மாற்றத்தில் நச்சுயிரிகளைப் பயன்படுத்தவில்லை. பார்லாக் செய்த D.N.A. (De Oxyribo Nucleic Acid) மரபணு மாற்றத்தில் கோதுமை, நெல் விதைகளில் உள்ள நார்ப் பொருள் மூலக்கூற்றை அகற்றி மாவாகும் மணி மூலக்கூற்றை ஏற்றியதில் அவ்விதைகள் மூலம் விளைந்த பயிர்களில் 5 அடி உயரம் வளர வேண்டிய வைக்கோல் 2 அல்லது 3 அடி உயரமே வளர்ந்து கதிர்களில் மணிகளின் எண்ணிக்கை பன்மடங்கு உயர்ந்தது. இதுபோன்ற மரபணு ஆராய்ச்சிகளில் நச்சுயிரிகள் பயனாகவில்லை.

மரபணு ஆராய்ச்சியில் ஒரு தாவரத்தில் மற்றொரு தாவரத்தின் மூலக்கூற்றை D.N.A. செய்து ஏற்றித் தரலாம்; தவறு இல்லை. ஒரு

தாவரத்தில் பூச்சி, புழு, விலங்குகளின் மூலக்கூற்றை ஏற்றி D.N.A. செய்வது ஒழுக்கக் கேடு. விதையின் D.N.A. மாற்றத்தில் நச்சுயிர் ஏற்றுவது விஞ்ஞான விபரீதம் என்று ஒரு கருத்தரங்கில் முன்னாள் கோவை வேளாண் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ஜெயராஜ் குறிப்பிட்டார்.

மரபணு மாற்றம் விஞ்ஞானத்திற்கு - குறிப்பாக நச்சுயிரி செலுத்தப்பட்ட பி.ட்டி. நெல், மக்காச்சோளம், பருத்தி விதைகளுக்கு ஏற்பட்ட எதிர்ப்பு உலகளாவியது. மாலிக்யுலர் ஜென்ட்டிக்ஸ் பிரிட்டிஷ் விஞ்ஞானி மைக்கேல் ஆண்டோனியோ போன்றோர் பி.ட்டி. அரிசி, கக்கரி, மக்காச்சோள உணவு புற்றுநோயை ஏற்படுத்தும் என்று திடமாகக் கூறுகின்றனர். பி.ட்டி. பருத்தி விதை பசுக்களுக்கு நோய் ஏற்படுத்தும். இந்தியாவிலிருந்து பாசுமதி பிரியாணி அரிசி (பாரம்பரிய ரகம்) அமெரிக்க - ஐரோப்பிய அங்காடிகளைக் கவர்ந்து விட்டது. இதை முறியடிக்க டாக்ஸ்மதி என்ற பி.ட்டி. பிரியாணி அரிசியை மான்சென்டோ உருவாக்கியது. ஆனால், ஐரோப்பிய நாடுகள் பி.ட்டி. அரிசிக்குத் தடை விதித்ததால் இந்தியாவில் கடைபோட்டார்கள். இந்திய அரிசி ஏற்றுமதியாளர் சங்கமே பி.ட்டி. அரிசி சோதனை வயல்களை எரித்து எதிர்ப்புக் காட்டியதால் அடங்கிப் போயினர். மரபணு மாற்ற விதைகள், உயிர்க்கொல்லி, ரசாயன உரங்களால் அபாயமில்லை என்ற வாதம் எடுபடாது. அந்த அளவில் இயற்கை விவசாய விழிப்புணர்வு வளர்ந்துவிட்டது.

குறிப்பாக மரபணு மாற்ற விதைகளின் சோதனை வயல்களுக்கு கேரளம், மத்தியப் பிரதேசம், தமிழ்நாடு, பிகார், தில்லி ஆகிய மாநிலங்கள் தடை செய்துவிட்டன.

இந்தியாவில் 2ஜி ஊழல் தெரியும்; நிலக்கரி ஊழல் தெரியும்; மரமணு மாற்ற விஞ்ஞான ஊழல் தெரியுமா? என்.ஆர்.சி.பி. எனப்படும் புனே பயோ தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனத்திற்கு யு.எஸ். பயோ தொழில்நுட்ப உடன்பாட்டு அடிப்படையில் 250 மில்லியன் டாலர் உலக வங்கி வழங்கியது. இதில் மரபணு மாற்றம் விஞ்ஞானிகள் சுருட்டிய தொகை மன்னிக்க முடியாத குற்றம். கணக்கு வழக்கு பார்க்கும் அரசு தணிக்கையாளர்கள் இந்த ஊழலை அம்பலப்படுத்தியும், சரத்பவார்

தலையீட்டால் அமுக்கப்பட்டுவிட்டது. எனினும், ஊடகங்களில் கசிந்த துளிகளில் சில:

மரபணு மாற்றம் - பி.ட்டி. அரிசி தொடர்பாகக் கோடிக்கணக்கான ரூபாய் செலவில் உருவான புனே பயோ தொழில்நுட்ப ஆய்வு நிலைய டீன் டாக்டர் எஸ்.கே. ரெய்னா சுய ஓய்வு பெற்றுக்கொண்டு அரசு சம்பளத்தைவிடப் பன்மடங்கு உயர்வான சம்பளத்துடன் 2004-இல் மான்சென்டோவில் சேர்ந்தார். அரசுப் பணத்தில் ஆராய்ச்சி செய்து தஸ்தாவேஜுகளையும் கூடவே திருடிக்கொண்டு அமெரிக்காவில் செட்டிலாகிவிட்டதாகத் தகவல்!

இதுபோல் டாக்டர் பன்சாலும் சுயஓய்வு பெற்றுக் கூடுதல் சம்பளத்தில் பன்னாட்டு விதை நிறுவனத்திற்குச் சென்றபோது, ஆராய்ச்சி தொடர்பாக அரசு தஸ்தாவேஜுகளையும் திருடிக்கொண்டு போனதாகக் கூறப்படுகிறது. பி.ட்டி. பிக்கனீர் பருத்தி விதையைக் கண்டுபிடித்த விஞ்ஞானி. பி.ஏ. குமாருக்கு சரத்பவார் "சர்தார் படேல் விருது' வழங்கினார். ஆனால், அந்த விதையை நம்பிப் பயிர் வைத்த பல விவசாயிகள் காய்ப்புழுத் தாக்குதலால் நஷ்டமுற்றுக் கடன் அடைக்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டனர். பி.ட்டி. பிக்கனீர் டூப்ளிகேட் விதை என்று பின்னர் நிரூபணமானது.

வேளாண்மையில் உற்பத்தியை உயர்த்த அடிப்படையாக மண்ணை வளப்படுத்த வேண்டும். 1994-இல் நிகழ்ந்த ரியோ பூமி மகாநாட்டின் மிக முக்கியப் பிரகடனம் மண்ணை வளப்படுத்தும் வளங்குன்றா வேளாண்மை (Sustainable Agriculture). இந்தியாவில் பசுமைப் புரட்சிக்கு அடிகோலிய அதே டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் பூமி மகாநாட்டுப் பிரகடனத்தை ஏற்று இன்று மண்வளம் போற்றும் இயற்கை விவசாயத்திற்கும், பயோடைவர்சிட்டியை வளர்க்கும் பாரம்பரிய விதை வங்கிக்கும் உதவுகிறார். முதலில் நல்ல மண் இருந்தால்தான் நல்ல விதை நல்ல விளைச்சல் தரும். முதலில் மண், இரண்டாவதுதான் விதை.

இயற்கை வழி என்றாலும் ரசாயன வழி என்றாலும் எல்லா நிலங்களிலும் சமமான விளைச்சல் பெறவே முடியாது. நல்ல விளைச்சலைத் தீர்மானிப்பது மண்ணில் உள்ள கரிமச்சத்து. எல்லா நிலங்களிலும் கரிமச்சத்து அதாவது ஹூமஸ் (HUMUS) சமனாக இருப்பதில்லை. ஹூமஸ் பெற மண்ணில் இயற்கை இடுபொருள் பயன்படுத்த வேண்டும்.

ஒரு ஹெக்டேரில் 7 டன், 8 டன், 10 டன் நெல் விளைவித்த சாதனையாளர்களின் உழவியல் நுட்பத்தைக் கவனித்தால் அவர்கள் நிறைய இயற்கை இடுபொருள் வழங்கி மண்ணில் கரிமத்தை உயர்த்தியபின் சற்று ரசாயன உரங்களை அளவுடன் வழங்கியிருப்பார்கள்.

பொதுவாக இயற்கை விவசாயிகள் பாரம்பரிய விதைகளைப் பயன்படுத்துவதில் ஆர்வமாயுள்ளவர்கள். இன்று பாரம்பரிய நெல் வகைகளில் மாப்பிள்ளை சம்பா, பெருங்கார், கவுனி, பிசி போன்றவை சிவப்பு நிற அரிசியைத் தரும். இவ்வாறே கருப்பு நெல், கருங்கார், கருங்குறுவை கருப்புநிற அரிசி தரும். இவை மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்தவை; நல்ல விலையும் உண்டு. வீரிய ஒட்டு ரக நெல் நிறைய விளைச்சல் தரலாம். ஆனால், பாரம்பரிய நெல் சாகுபடியில் விளைச்சல் குறைவாக இருக்கும். நஞ்சில்லா உணவும் நல்வாழ்வு உணவும் தயாரிப்பவர்கள் தேசத் துரோகிகள் அல்லர். அமெரிக்காவில் இயற்கை விவசாயத்தைத் தோற்றுவித்த ஜே.ஆர். ரொடேலுக்கும் இதே சோதனை வந்தது. ரசாயன உர நிறுவனங்கள் இவரை தேசத் துரோகி என்று தூற்றின. 1942-இல் இவர் பென்சில் வேனியாவில் "எம்மாவுஸ்' என்ற பண்ணையை வாங்கி இயற்கை விவசாயம் செய்ததுடன், கூடவே ஓர் அச்சகத்தையும் நடத்தி ஆல்பர்ட் ஹோவார்டின் "விவசாய உயில்' நூலையும் வெளியிட்டார்.

"ஹெல்த் ஃபைண்டர்' என்ற பெயரில் ஒரு கையேட்டை வெளியிட்டு, அதில் "ஒரு மனிதன் ஆரோக்கியமாக வாழ ரசாயன விவசாயத்தைப் புறந்தள்ளிவிட்டு பாரம்பரிய விதைகளைக் கொண்டு இயற்கை விவசாயம் செய்து நஞ்சில்லா உணவை நல்ல மண்ணில் விளைவித்து உண்டால் மரண பயம் இல்லை' என்றார். இது அமெரிக்க அரசுக்கு எரிச்சல் மூட்டியது. இவரது "ஹெல்த் ஃபைண்டர்' கையேடு தடை செய்யப்பட்டது. "ரசாயன உணவைப் புறக்கணித்துவிட்டு இயற்கை வழியில் விளைந்ததை உண்ணுங்கள்...' என்று எழுதியது தேசத் துரோகமா? என்று இவர் கூறிய வாதத்தை ஏற்று இவர் விடுதலை செய்யப்பட்டு இவர் கையேட்டுக்குப் போட்ட தடையும் உடைக்கப்பட்டது. இதனால் பெற்ற விளம்பரத்தால் இவரது "ஹெல்த் ஃபைண்டர்' பல லட்சம் பிரதிகள் விற்கப்பட்டதும் நூற்றுக்கணக்கில்

இயற்கை விவசாயப் பண்ணைகள் உருவாக்கப்பட்டதும் தொடர் கதை. இந்திய இயற்கை விவசாய வரலாற்றில் 18.1.2016 ஒரு பொன்னாள். பிரதமர் அன்றுதான் சிக்கிம் தலைநகர் காங்டாக்கில் "சிக்கிம் ஆர்கானிக்' என்ற வணிகக் குறியீட்டை வெளியிட்டு சிக்கிம் முதல்வர் பவான் சாம்லிங்குக்கு ஒட்டுமொத்த மாநிலத்தையே இயற்கை வழிக்கு மாற்றியமைத்த பணிக்கு இரண்டு கேடயங்களை வழங்கினார். நவீன விவசாயம் செய்துள்ள சாதனைகளில் கடந்த முப்பது ஆண்டுகளில் சுமார் மூன்று லட்சம் விவசாயிகளின் தற்கொலைகள் முக்கியமானது. பஞ்சாபில் மட்டும் மரபணு மாற்றப் பருத்தி சாகுபடி மட்டுமல்ல; டிராக்டர் கடனை அடைக்க முடியாமல் ஆயிரக்கணக்கான விவசாயிகள் இறந்துள்ளனர். பஞ்சாப் அரசின் சின்னம் டிராக்டர். பஞ்சாபின் கதை தமிழ்நாட்டில் தொடர்கிறது. சோழகன் குடிகாடு விவசாயி பாலன் கடைசி இரண்டு தவணைகள் செலுத்தாததால் வங்கி வழக்குத் தொடர்ந்து ஒரு கிரிமினலைப்போல் தாக்கப்பட்டுள்ளார். 9,000 கோடி ரூபாய் கடன் பாக்கி வைத்துள்ள விஜய் மல்லையாவை காவல் துறை நெருங்க முடியுமா? பாலன் தாக்கப்பட்டச் செய்தியை அடுத்து அரியலூரில் அழகர் என்ற விவசாயி டிராக்டர் கடன் காரணமாகத் தற்கொலை செய்து கொண்டார்.

டிராக்டர் கடன் காரணமாக எதிர்காலத்தில் இன்னும் எத்தனை தமிழ்நாடு விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளப் போகிறார்களோ, புரியவில்லை. இயற்கை வழி விவசாயத்தில் தற்கொலைக்கு இடம் இல்லை. எல்லைப் புறங்களில் காவல் புரியும் பல்லாயிரக்கணக்கான ராணுவ வீரர்கள் இந்திய மண்ணைக் காக்கப் போராடுவதைப் போலவே மண்ணின் வளத்தை மீட்பதில் இயற்கை விவசாயிகள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். "தாய் மண்ணே வணக்கம்' என்பதுவே இயற்கை விவசாயிகளின் வேதமாக உள்ளபோது, இயற்கை விவசாயம் எப்படி தேசத் துரோகமாகும்?

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## தாய்லாந்து' கொய்யாவில் தாராள லாபம்!



வெளிநாட்டு வேலை கிடைத்தும் விவசாய ஆர்வத்தால் தாய்நாட்டை பிரிய மனமின்றி நிலத்தை பண்படுத்தி, தாய்லாந்து கொய்யா நடவில் சாதிக்கிறார், திண்டுக்கல் முள்ளிப்பாடியை சேர்ந்த சிவக்குமார். காலங்கள் மாற மாற பல்வேறு தொழில்நுட்பங்கள் பெருகி வருகின்றன. விவசாயத்தில் குறுகிய முதலீட்டில் அதிக லாபம் தரும் தாய்லாந்து கொய்யா சாகுபடி குறித்து அவர் கூறியதாவது: தாய்லாந்து கொய்யா கன்று ரூ.350 வீதம் வாங்கினேன். ஒரு ஏக்கரில் 2 அடிக்கு 2 அடி குழி தோண்டி 15அடிக்கு 15அடி இடைவெளியில் அடர் நடவு முறையில் 400 கன்றுகள் நடவு செய்தேன். கொய்யாவுடன் சேர்த்து வேறு ஊடுபயிர் விளைவிக்க நினைத்தால் ஒரு ஏக்கருக்கு 150 கன்றுகள் நடவு செய்தால் போதும். நீர் தட்டுப்பாடான பகுதியில் சொட்டுநீர் பாசனம் சிறந்தது. நடவு செய்து 4 அல்லது 5 மாதங்களில் பூக்கத் துவங்கிவிடும். மரத்திற்கு காயை தாங்கும் சக்தி கிடைக்கும் வரை இரண்டரை ஆண்டுகள் பூக்களை பறித்துவிட வேண்டும். மாதம் ஒரு முறை மண்புழு உரம், நுண்ணுயிர் உரம் வைத்து தினமும் தண்ணீர் ஊற்றினால் போதும்.

மரம் நன்கு வளர்ந்த பின் ஏப்ரல், மே தவிர்த்து மற்ற மாதங்களில் மகசூல் அதிகம் கிடைக்கும். இந்த வகை கொய்யா நாட்டு கொய்யாவை காட்டிலும் அளவில் பெரிதாக இருக்கும்; விதைகள் அதிகம் இருக்காது. ஒரு கொய்யா முக்கால் கிலோ முதல் ஒரு கிலோ வரை எடை இருக்கும். ஒரு கிலோ ரூ.100 முதல் ரூ.150 வரை விற்கிறேன். ஆண்டுக்கு ரூ.1 லட்சம் லாபம் கிடைக்கும்.

எந்த நிலத்தை வறண்ட பூமியென்று சொல்லி தவிர்த்தனரோ அங்கு தாய்லாந்து கொய்யா மூலம் லாபம் பெறுகிறேன். ஒரு ஏக்கரில் சாகுபடி செய்ய ரூ.ஒன்று முதல் ரூ.ஒன்றரை லட்சம் செலவு செய்தால் போதும். இரண்டே ஆண்டுகளில் செலவு தொகையை தாண்டி லாபம் பார்க்க ஆரம்பிக்கலாம், என்றார். இவரிடம் பேச : 90038 09797.

**-ஆ. நல்லசிவன், திண்டுக்கல்.**

## பானகம் தயாரிப்பது எளிது!




மதுரை மனையியல் கல்லூரியில் விவசாயிகள், தொழில் முனைவோருக்கு புளி பானகம், அடர் கரும்புச்சாறு, சப்போட்டா சாறு எடுக்கும் தொழில் நுட்பம் கற்றுத்தரப்படுகிறது.

இதுகுறித்து மனையியல் கல்லூரி உணவியல் மற்றும் சத்தியல் துறைத்தலைவர் காஞ்சனா கூறியது:
விளைச்சலோடு விவசாயிகள் நின்றுவிடாமல் அதை மதிப்புக்கூட்டிய பொருளாக மாற்றும் தொழில்நுட்பத்தை கற்றுக் கொள்ள வேண்டும்.
விவசாயிகள் தனியாக செய்யாமல் குழுவாக சேர்ந்து தொழில்நுட்பத்திற்கு மாறினால் விளைபொருளுக்கு விலை கிடைக்காத காலத்தில் அவற்றை மதிப்பு கூட்டலாம். தொழில்முனைவோர்களும் இதை பயன்படுத்தலாம். இதற்கான கருவிகள் கல்லூரியில் உள்ளன. அவற்றை வாடகை முறையில் பயன்படுத்தலாம்.

ஆலைக் கரும்புச்சாற்றை நீண்ட நாட்கள் வைத்திருக்க முடியாது. அதை இரண்டடுக்கு பாத்திரத்தில் ஊற்றி மூன்றில் ஒரு பங்காகும் வரை நீராவி மூலம் பாகாக காய்ச்ச வேண்டும். இதை நீண்ட நாட்கள் வைத்திருக்கலாம். பொரி உருண்டை, அதிரசம், கடலை மிட்டாய், கேக், பிஸ்கெட்டில் இச்சாறை சேர்த்தால் மணமும் சுவையும் அதிகமாக இருக்கும். பாட்டிலில் சேகரித்து வைக்கலாம்.
புளியை சுடுதண்ணீரில் ஊறவைத்து சாறு எடுத்து அதனுடன் பனங்கற்கண்டு அல்லது நாட்டு சர்க்கரை, சுக்கு சேர்த்து காய்ச்சி வடிகட்ட வேண்டும். சோடியம் பென்சோயேட்டை "பிரிசர்வேடிவ்' ஆக பயன்படுத்தலாம். இந்த பானகத்தை மற்ற குளிர்பானங்களை போன்று குடிக்கலாம். இதேபோல சப்போட்டா சாறும் தயாரித்து விற்கலாம், என்றார். தொடர்புக்கு 0452 - 242 4680

## பப்பாளியில் கள்ளிப்பூச்சி தாக்குதலா

பழநி தொப்பம்பட்டி பகுதியில் பப்பாளி மரங்களில் கள்ளிப்பூச்சிகள் தாக்குதல் அதிகமாக உள்ளது. இது சாறு உறிஞ்சும் பூச்சி வகையை சார்ந்தது. மஞ்சள் நிற உடலுடன் மெழுகு போன்று பால் நிறத்தில் காணப்படும். பாதிக்கப்பட்ட பப்பாளி செடியின் தரைப்பகுதிக்கு மேல் இலை, தண்டுப்பகுதி, பழம் ஆகியவை பருத்தி இலை போன்று கொத்தாக காணப்படும். தேன் போன்ற திரவத்தை உடலில் சுரப்பதால்

கருமைநிற பூஞ்சாணம் வளரும். இதனால் ஒளிச்சேர்க்கை பாதிக்கப்பட்டு வளர்ச்சி குன்றி மகசூல் பாதிக்கப்படும்.

இதற்கான பாதுகாப்பு முறைகளில் வயலை சுத்தம் செய்வது முக்கியம். வயலை சுற்றி பார்த்தீனியம், செம்பருத்தி செடிகள் இருந்தால் அப்புறப்படுத்தி, காய்ந்த செடி, இலைகளை சேகரித்து அழிக்க வேண்டும். உயிரியல் முறையில் "அசிரோபேகஸ் பாபாயே' என்ற ஒட்டுண்ணியை பயன்படுத்தி கட்டுப்படுத்தலாம்.

ஒரு லிட்டர் தண்ணீருக்கு வேப்பெண்ணெய் 2 சதவீதம், அல்லது வேப்பங்கொட்டை கரைசல் 5 சதவீதம் அல்லது மீன் எண்ணெய் தூள் 25 கிராம் கலந்து தெளிக்கலாம். ரசாயன பூச்சிக்கொல்லியான குளோர் பைரிபாஸ், புரேபனோபாஸ் பயன்படுத்தியும் இவற்றை கட்டுப்படுத்தலாம். **எஸ்.அய்யனார், ஆய்வு மாணவர், விவசாய கல்லூரி, மதுரை.**

## கருப்பட்டி ரகங்களுக்கு ஏலம்

சிறுவலூர்: சிறுவலூரில் பதிப்பாளையம் கருப்பட்டி உற்பத்தியாளர் சங்கத்தில் வாரந்தோறும், திங்களன்று தென்னங்கருப்பட்டி, பனங்கருப்பட்டி ஏலம் நடக்கிறது. நேற்று நடந்த ஏலத்தில் பனங்கருப்பட்டி, 1,500 கிலோவும், தென்னங்கருப்பட்டி, 500 கிலோவும் வரத்தானது. தென்னங்கருப்பட்டி கிலோ 78 ரூபாய்க்கும், பனங்கருப்பட்டி, 88 ரூபாய்க்கும் விலைபோனது. கடந்த வாரத்தை காட்டிலும், கருப்பட்டி விலை உயர்ந்ததால், உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## ஒட்டன்சக்கிரம் மார்க்கெட்டில் விலை குறையாத பச்சை மிளகாய் காய்கறிகள் இறங்குமுகம்

ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் அனைத்து காய்களின் விலை இறங்குமுகமாக காணப்பட்ட போதிலும், வரத்து குறைவு காரணமாக பச்சை மிளகாய் மட்டும் விலை குறையாமல் உள்ளது. ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டிற்கு பல்வேறு பகுதிகளில்

விளையும் தக்காளி, கொத்தவரை, முருங்கைக்காய், வெங்காயம் , பீன்ஸ், பச்சை மிளகாய் உட்பட அனைத்து காய்களும் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. உள்ளூர் பகுதியில் விளைச்சல் குறைந்துள்ள காலங்களில் வெளிமாவட்டங்களில் விளைந்த காய்கள் அதிகமாக வரும். தற்போது பச்சை மிளகாய் குறைந்துள்ள நிலையில் மணப்பாறை பகுதியில் அறுவடை செய்யப்படும் சம்பா மிளகாய் தினமும் மார்க்கெட்டிற்கு வருகிறது. மற்ற காய்களின் வரத்து அதிகரித்துள்ள நிலையில் பச்சை மிளகாய் மட்டும் குறைவாக வருவதால், இதன் விலை குறையாமல் அப்படியே <உள்ளது. ஒரு கிலோ பச்சை மிளகாய்(சம்பா ரகம்) ரூ.24 க்கு குறையாமல் விற்கப்படுகிறது. ஆனால் வெண்டை கிலோ ரூ.4, கொத்தவரை ரூ.10, தக்காளி ரூ.4க்கு விற்கிறது. இதே போல் மற்ற காய்கறிகளும் விலை குறைவாகவே உள்ளன.

## மீனவ கிராம மக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி

மரக்காணம்:மீனவர்கள் வசிக்கும் பகுதியில், குறும்பட விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

மரக்காணம் தாலுகா அனுமந்தை குப்பம், எக்கியர் குப்பம், கூனிமேடுகுப்பம், வசவன்குப்பம், கைப்பாணிகுப்பம் உள்பட 13 மீனவ கிராமங்களைசேர்ந்த வாக்காளர்கள் 100 சதவீதம் வாக்களிப்பது குறித்து குறும்பட விளக்க விழிப்புணர்வு முகாம் நடந்தது.மரக்காணத்தில் உள்ள ரீஜென்சி திருமண மண்டபத்தில் நடந்த நிகழ்ச்சிக்கு, திண்டிவனம் சப்-கலெக்டர் ஸ்ரீதர் தலைமை தாங்கினார். தாசில்தார் பாலசந்திரன் முன்னிலை வகித்தார். துணை தாசில்தார் அலெக்சாண்டர் வரவேற்றார். வருவாய் ஆய்வாளர்கள் ராமகிருஷ்ணன், ரமேஷ், தலைமை அலுவலர் வெங்கடேசன், வி.ஏ.ஓ.,க்கள் கலையரசன், நடராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## உளுந்து சாகுபடி பணி: அதிகாரிகள் ஆய்வு

குளித்தலை: குளித்தலை அருகே, உளுந்து சாகுபடி நடந்து வரும் கிராமங்களில், வேளாண் அதிகாரிகள் களபார்வையிட்டு ஆய்வு செய்தனர். கரூர் மாவட்டம், குளித்தலை அடுத்த முதலைப்பட்டி,

கட்டாணிமேடு, குளித்தலை ஒன்றியம், ஓந்தாம்பட்டி, சூரியனூர் உட்பட பல கிராமங்களில், 50 ஏக்கர் பரப்பில் புழுதேரி வேளாண் அறிவியல் மையம் சார்பில், வம்பன் ரக இலவச உளுந்து விதை அளிக்கப்பட்டு, சாகுபடி செய்யப்பட்டுகிறது. இது தொடர்ச்சியாக, வேளாண் அறிவியல் மையத்தின் சார்பில், வேளாண் விரிவாக்க அலுவலர் தமிழ்செல்வி மற்றும் தொழில்நுட்ப வல்லுனர்கள் உளுந்து சாகுபடி நடந்து வரும் கிராமங்களில் களபார்வையிட்டு விவசாயிகளுக்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்கினர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## அன்று சின்னப்பிள்ளை... இன்று பூங்கோதை காலை தொட்டு ஆசிபெற்ற பிரதமர் பெரம்பலூர் பெண் விவசாயி உருக்கம்



பெரம்பலார்: மக்காச்சோள சாகுபடியில் சாதனை படைக்க பெரம்பலார் பெண் விவசாயி பூங்கோதைக்கு பிரதமர் நரேந்திர மோடி விருது வழங்கினார். அப்போது காலைத்தொட்டு பிரதமர் ஆசி பெற்றதை வாழ்வில் மறக்க முடியாத அனுபவம் என்று கூறுகிறார் பூங்கோதை.

பெரம்பலூர் மாவட்டம் மக்காச்சோள சாகுபடியில் தொடர்ந்து தமிழக அளவில் முதலிடம் பெற்று வருகிறது. இந்தாண்டு 1.27 லட்சம் ஏக்கர் பரப்பளவில் மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மக்காச்சோள மகசூல் பெருக்க, முந்தைய கலெக்டர் தரேஸ் அகமது, 'ஒரு ஹெக்டாரில் ஒரு லட்சம் பெருக்கும் திட்டத்தை' அறிமுகப்படுத்தினார். இதன்படி குறைந்தபட்சம் ஒரு ஹெக்டர் அதாவது இரண்டரை ஏக்கருக்கு மேல் மக்காச்சோளம் சாகுபடி செய்யும் விவசாயிக்கு, வேளாண் துறை மூலம் ஆலோசனைகளை வழங்கி, இடுபொருட்கள் இலவசமாக வழங்கி ஊக்குவிக்கப்பட்டது.

அந்தவகையில் வேப்பந்தட்டை தாலுகா வி.களத்தூர் அடுத்த இனாம் அகரத்தை சேர்ந்த பூங்கோதை(60) என்பவர் மாவட்ட நிர்வாக உதவியுடன், இரண்டரை ஏக்கரில் மக்காச்சோள சாகுபடியில் ஈடுபட்டார். ஏற்கனவே ஏக்கருக்கு 21 முதல் 25 மூட்டைகளை அறுவடை செய்து வந்த பூங்கோதை 2014-2015ம் ஆண்டில் ஒரு ஏக்கரில் 51 மூட்டைகளை அறுவடை செய்துள்ளார். இதன்படி 14,233 கிலோ மக்காச் சோளத்தையும் அறுவடை செய்துள்ளார். இத்தகவலை பெரம்பலூர் மாவட்ட வேளாண்மைத்துறை, புள்ளியியல்துறை இணைந்து நடத்தும் பயிர்அறுவடைப் பரிசோதனைக் குழு ரேண்டம் எண் அடிப்படையில் தேர்வுசெய்து, மத்திய, மாநில அரசுகளுக்கு அனுப்பினர். இதை மத்திய அரசும் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தது. பூங்கோதையின் உற்பத்தி அளவே அதிகம் உள்ளதை கண்டறிந்து அவரை மத்திய அரசின் 'கிர்ஷி கர்மான்' எனப்படும் தனிநபர் சாதனையாளர் விருதுக்கு தேர்வு செய்தது.

இதைத்தொடர்ந்து கடந்த 18ம் தேதி தமிழக தலைமை செயலகத்தால் வரவழைக்கப்பட்ட பூங்கோதை, டெல்லிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு 19ம் தேதி பூங்கோதைக்கு பிரதமர் மோடி கிர்ஷி கர்மான் விருதும், ரூ.2 லட்சம் ரொக்கப் பரிசும் வழங்கி கவுரவித்தார். மேலும் அவரது கால்களைத் தொடுவதுபோல் குனிந்து கைகளை நீட்டித் தொட்டு வணங்கினார்.

60 வயது மூதாட்டியான பெண் விவசாயி பூங்கோதை, கணவர் முருகன் இறந்த பிறகும் தளராமல் விவசாயத்தில் ஈடுபட்டு, அதில் தேசிய அளவில் சாதனை படைத்தது பெரம்பலூர் மாவட்டத்திற்குப் பெருமை சேர்ப்பதாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த சாதனை குறித்து பூங்கோதை கூறுகையில், ‘வேளாண் அதிகாரிகளின் ஆலோசனையுடன் மக்காசோளம் பயிரிட்டேன். விதைக்கும் முன் வயலுக்கு மாட்டு எருவும், ஏரி மண்ணும் ேபாட்டு உழவு செய்தேன். ரசாயன உரங்களை பெருமளவு குறைத்துவிட்டேன். அறுவடையின்போது எதிர்பாராத அளவுக்கு 14.4 டன் மகசூல் கிடைத்தது. படிப்பறிவில்லாத எனக்கு பிரதமர் மோடி விருது வழங்கி, ஆசி பெற்றது வாழ்வில் மறக்க முடியாத அனுபவம்’ என்றார். இதேபோல் கடந்த 1999ம் ஆண்டு மதுரையை சேர்ந்த சின்னப்பிள்ளையின் சேவையை பாராட்டி அவருக்கு அப்போதைய பிரதமர் வாஜ்பாய் விருது வழங்கி, அவரது காலைத்தொட்டு வணங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.